**MCOP.No.12/2019 P.W.1-கதிவரன் 04.03.2026**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கின் மனுதாரர் விஜயலட்சமி என்றால் சரிதான். அவர் என்னை இந்த வழக்கில் சாட்சியம அளிப்பதற்காக மட்டும் நியமித்துள்ளார் என்றால் சரிதான். எனது வயது 65. விஜயலட்சுமிக்கு எவ்வளவு வயது என்றால் 75. இந்த விபத்தில் இறந்த நபரின் வயது, வருமானம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு மேற்படி விவரங்கள் தெரியாது என்றும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 13.01.2017 அன்று நடந்த விபத்து குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த விபத்தில் மொத்தம் 4 வாகனங்கள் சம்பந்தப்பட்டுள்ள விவரம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னென்ன வாகனங்கள் என்றால் இண்டிகா கார், லாரி, பைக் மற்றும் ஸ்கூட்டி ஆகியவையாகும். மேற்கண்ட வாகனங்கள் தவிர மற்றொரு லாரியும் விபத்தில் சம்பந்தப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 4 வாகனங்களின் உரிமையாளர்களையும், வாகனத்தை ஓட்டியவர்களையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சேர்த்துள்ளோம். உரிய தரப்பினர்களை சேர்க்காததால் இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. TN-19-J-9526 என்ற இருசக்கர வாகனத்தால் தான் விபத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்திற்கு காப்பீடு சான்று இல்லை என்பதால் இம்மனு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி இருசக்கர வாகனமானது திடீரென்று வலதுபக்கம் திரும்பி, கால்தடையை பிடித்ததால் விபத்து நிகழந்தது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் நிதானமாகவும், கவனமாகவும் தான் பேருந்தை ஓட்டினார் என்றால் சரியல்ல. மனுதாரர் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்டல. விஜயலட்சுமியின் கணவர் அரசு ஊழியர் என்றால் சரிதான். அவர் இறந்துவிட்டார். விஜயலட்சுமி அவரது கணவரின் ஓய்வூதியத்தை வாங்குகிறார் என்றால் சரிதான். தற்போது சாட்சி விஜயலட்சுமியின் கணவர் அரசு ஊழியர் இல்லை என்று கூறுகிறார். விஜயலட்சுமிக்கு அருண்குமார் மற்றும் ஒரு மகள் உள்ளார் என்றால் சரிதான். விஜயலட்சுமி ஓய்வூதியம் வாங்குகிறார் என்றும், அவரை பராமரிக்க அவரது 2 பிள்ளைகள் உள்ளனர் என்றும், எனவே விஜயலட்சுமி கோரியுள்ள இழப்பீடு அதிகமானது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** இல்லை